# செம்பாக்கம் நகராட்சியில் 31.5.2019ம் நாள் வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணியளவில் தனி அலுவலர் அவர்களின் தலைமையில் நடைப்பெற்ற அவசரக்கூட்டத்தின் நடவடிக்கைகளின் நகல்.

**கலந்துக்கொண்ட தனி அலுவலர் பெயர் மற்றும் பதவி:** **திருமதி. மு.ரா. வசந்தி**
**தனி அலுவலர் / ஆணையாளர்,**
**செம்பாக்கம் நகராட்சி**

**பொருள் எண்.1**

செம்பாக்கம் நகராட்சி பகுதியில் குடிநீர் குழாய் இணைப்பு வழங்குதல், வரைவு துணை விதிகளை இந்நகர மன்றம் தீர்மானம் எண்.221 நாள் 30.4.2018 —ல் ஒப்புதல் அளித்து தீர்மானம் நிறைவேற்றியதன் அடிப்படையில், குடிநீர் துணை விதிகள் (தமிழ் மற்றும் ஆங்கிலம்) பொது அங்கீகாரம் வழங்க நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அனுமதிக்கு பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டது.

நகராட்சி நிர்வாக ஆணையரக தலைமை பொறியாளர் அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண்.31596/2018/குவ3 நாள் 1.2.2019யில் கீழ்காணும் குடிநீர் கட்டணங்களுக்கான குடிநீர் விநியோக துணை விதிகளுக்கு பொது அங்கீகாரம் (General Approval) வழங்கி உத்திரவிடப்பட்டது.

| வ. எண் | குடிநீர் பயன்பாடு விவரம் | நடைமுறைப்படுத்தப்படவுள்ள கட்டணம் | |
|---|---|---|---|
| | | மாதம் ஒன்றுக்கு குறைந்தபட்ச குடிநீர் கட்டணம் (ரூ.) | வைப்புத் தொகை (ரூ.) |
| 1 | வீட்டு பயன்பாடு இணைப்பு ஒன்றுக்கு | 150 | 5000 |
| 2 | வணிக பயன்பாடு இணைப்பு ஒன்றுக்கு | 300 | 10000 |
| 3 | தொழிற்சாலை பயன்பாடு இணைப்பு ஒன்றுக்கு | 450 | 15000 |

காஞ்சிபுரம் மாவட்ட செய்தி மக்கள் தொடர்புத்துறை மூலமாக 13.2.2019ம் தேதியில் The New Indian Express நாளிதழ் மற்றும் மாலை மலர் ஆகிய நாளிதழ்களில் விளம்பரம் செய்யப்பட்டது. அவ்விளம்பரத்தில் பொது மக்களின் ஆட்சேபணைகள் மற்றும் ஆலோசணைகள் ஏதும் இருப்பின் எழுத்து மூலமாகவோ, நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ, விளம்பரம் செய்யப்பட்ட நாளிலிருந்து 30 நாட்களுக்குள் தெரிவிக்க கேட்டுக் கொள்ளப்பட்டது.

மேலும், குடிநீர் துணை விதிகள் (தமிழ் மற்றும் ஆங்கிலம்) காஞ்சிபுரம் மாவட்ட அரசிதழ் எண்.4 நாள் 1.4.2019-ல் வெளியிடப்பட்டது. பொது மக்களிடமிருந்து ஆட்சேபணைகள் மற்றும் ஆலோசணைகள் ஏதும் வரப்பெறவில்லை. எனவே, குடிநீர் துணை விதிகளுக்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் இறுதி அங்கீகாரம் (Final Approval) பெற மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் இறுதி அங்கீகாரத்திற்கு பிரேரணை அனுப்ப மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. குடிநீர் துணை விதிகள் மாவட்ட அரசிதழில் வெளியிட்டமைக்கான பிரசுர கட்டணம் ரூ.33,600/- நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கியமைக்கும், இறுதி அங்கீகார உத்திரவு பெறப்பட்டவுடன் மாவட்ட அரசிதழில் குடிநீர் துணை விதிகளை பிரசுரம் செய்ய ஆகும் செலவினத்திற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.475 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.2**

செம்பாக்கம் நகராட்சியில் குடிநீர் விநியோகம் ஆழ்துளை கிணறுகள் மற்றும் திறந்த வெளி கிணறுகளிலிருந்து மின் மோட்டார் பொருத்தி நகரில் பல்வேறு இடங்களில் 13 மேல் நிலை நீர் தேக்கத் தொட்டிகள் மூலமாகவும், 11 நேரடி நீருந்துகள் மூலமாகவும், 14 குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் மூலமாகவும் நாள்தோறும் 4.30 MLD குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்போது கோடையினால் ஏற்படும் குடிநீர் பற்றாக்குறையினை சமாளிக்கவும், சீரான குடிநீர் விநியோகம் வழங்கவும், கீழ்கண்ட இடங்களில் ஆழ்துளை கிணறு அமைத்து நீர்மூழ்கி மின் மோட்டார் பொருத்தி குடிநீர் விநியோகம் செய்ய தயாரிக்கப்பட்ட மதிப்பீடு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வார்டு எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | 1 | செம்பாக்கம் ஏரிக்கரை தெருவில் ஆழ்துளை கிணறு அமைத்து நீர்மூழ்கி மின் மோட்டார் பொருத்தி குடிநீர் குழாய் பதித்தல் பணி | 4.00 |
| 2 | 2 | ஆர்.பி. அவென்யு பகுதியில் ஆழ்துளை கிணறு அமைத்து நீர்மூழ்கி மின் மோட்டார் பொருத்தி குடிநீர் குழாய் பதித்தல் பணி | 4.00 |
| 3 | 3 | செம்பாக்கம் நன்மங்கலம் மெயின் ரோடு பகுதியில் ஆழ்துளை கிணறு அமைத்து நீர்மூழ்கி மின் மோட்டார் பொருத்தி குடிநீர் குழாய் பதித்தல் பணி | 4.00 |
| 4 | 4 | குளக்கரை தெருவில் ஆழ்துளை கிணறு அமைத்து நீர்மூழ்கி மின் மோட்டார் பொருத்தி குடிநீர் குழாய் பதித்தல் பணி | 4.00 |
| 5 | 5 | 2வது பஜனை கோயில் தெருவில் ஆழ்துளை கிணறு அமைத்து நீர்மூழ்கி மின் மோட்டார் பொருத்தி குடிநீர் குழாய் பதித்தல் பணி | 4.00 |
| 6 | 6 | மணியம்மை தெருவில் ஆழ்துளை கிணறு அமைத்து நீர்மூழ்கி மின் மோட்டார் பொருத்தி குடிநீர் குழாய் பதித்தல் பணி | 4.00 |
| 7 | 7 | விஜிபி சீனிவாசா நகர் வடக்கு பகுதியில் ஆழ்துளை கிணறு அமைத்து நீர்மூழ்கி மின் மோட்டார் பொருத்தி குடிநீர் குழாய் பதித்தல் பணி | 4.00 |
| 8 | 8 | திருமகள் நகர் - கிருஷ்ணா அவென்யு பகுதியில் ஆழ்துளை கிணறு அமைத்து நீர்மூழ்கி மின் மோட்டார் பொருத்தி குடிநீர் குழாய் பதித்தல் பணி | 4.00 |
| 9 | 9 | ராஜகீழ்பாக்கம் ஏரிக்கரை பகுதியில் ஆழ்துளை கிணறு அமைத்து நீர்மூழ்கி மின் மோட்டார் பொருத்தி குடிநீர் குழாய் பதித்தல் பணி | 4.00 |

| | | | |
|---|---|---|---|
| 10 | 10 | வள்ளலார் தெருவில் ஆழ்துளை கிணறு அமைத்து நீர்மூழ்கி மின் மோட்டார் பொருத்தி குடிநீர் குழாய் பதித்தல் பணி | 4.00 |
| 11 | 11 | சர்ச் தெரு அன்னை அஞ்சுகம் அம்மையார் பூங்கா அருகில் ஆழ்துளை கிணறு அமைத்து நீர்மூழ்கி மின் மோட்டார் பொருத்தி குடிநீர் குழாய் பதித்தல் பணி | 4.00 |
| 12 | 12 | வள்ளல் யூசப் நகர் மெயின் ரோடு ஆழ்துளை கிணறு அமைத்து நீர்மூழ்கி மின் மோட்டார் பொருத்தி குடிநீர் குழாய் பதித்தல் பணி | 4.00 |
| | | மொத்தம் | **48.00** |

**அலுவலக குறிப்பு:-**

1. அவசர அவசியம் கருதி குடிநீர் அத்தியாவசிய பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியமைக்கு மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.
2. மேற்கண்ட மதிப்பீட்டு தொகையினை நகராட்சியின் வருவாய் நிநிதயிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம். அல்லது SDRF திட்டத்தின் கீழ் மேற்கண்ட மதிப்பீட்டு தொகைக்கு நிதி ஒதுக்கீடு செய்யும் பட்சத்தில் ஈடு செய்துக் கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.476 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.3**

செம்பாக்கம் நகராட்சியில் குடிநீர் விநியோகம் ஆழ்துளை கிணறுகள் மற்றும் திறந்த வெளி கிணறுகளிலிருந்து மின் மோட்டார் பொருத்தி நகரில் பல்வேறு இடங்களில் 13 மேல் நிலை நீர் தேக்கத் தொட்டிகள் மூலமாகவும், 11 நேரடி நீருந்துகள் மூலமாகவும், 14 குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் மூலமாகவும் நாள்தோறும் 4.30 MLD குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்போது கோடையினால் ஏற்படும் குடிநீர் பற்றாக்குறையினை சமாளிக்கவும், சீரான குடிநீர் விநியோகம் வழங்கவும், கீழ்கண்ட இடங்களில் பகிர்மான குழாய் பதித்தல் மற்றும் நகரில் ஏற்கனவே பயன்பாட்டில் உள்ள திறந்த வெளி கிணற்றினை தூர்வாரி ஆழப்படுத்துதல் பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | செம்பாக்கம் நகராட்சிக்குட்பட்ட விஜிபி பொன் நகர் OHT முதல் சாம்ராஜ் நகர் 1வது தெரு வரை, கணேஷ் நகர் மெயின் ரோடு, 2வது பஜனை கோயில் தெரு, புகழேந்தி தெரு, அகத்தியர் தெரு மற்றும் வள்ளல் யூசப் நகர் 2வது தெருவில் குழாய் பதித்தல் பணி | 9.90 |
| 2 | நகராட்சியின் பராமரிப்பில் உள்ள திறந்த வெளி கிணறுகள் தூர் வாரி ஆழப்படுத்துதல் பணி | 9.90 |

அலுவலக குறிப்பு:-

1. அவசர அவசியம் கருதி குடிநீர் அத்தியாவசிய பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியமைக்கு மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.
2. மேற்கண்ட மதிப்பீட்டு தொகையினை நகராட்சியின் வருவாய் நிநிதயிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.477 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.4**

வேங்கடமங்கலத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மை செயலாக்க மையத்தில், தாம்பரம், பல்லவபுரம் மற்றும் செம்பாக்கம் இணைந்து திடக்கழிவு மேலாண்மை பணியினை ஒருங்கிணைந்து செயல்படுத்தி வருகிறது. இந்நிலையில் 7.4.2019ம் தேதியன்று திடீரென கோடை வெப்பத்தின் காரணமாக நெருப்பு ஏற்பட்டு அப்பகுதியில் ஏற்கனவே கடந்த ஆறாண்டுகளாக குப்பையிலிருந்து எரிசக்தி எடுப்பதற்காக சேமிக்கப்பட்டிருந்த RDF (Refused Derived Fuel) அனைத்தும் எரிய துவங்கி அப்பகுதி முழுவதும் புகை மண்டலமாக மாறி அப்பகுதியினை சுற்றி அமைந்துள்ள 18 கிராமங்களில் வசிக்கும் பொது மக்களுக்கு மூச்சு தினறல், சுவாச கோளாறு, ஆஸ்துமா, நுரையீரல் சம்பந்தப்பட்ட தொற்று நோய்கள் ஏற்படுவதாலும், சுற்றுச்சூழல் மாசு அடைய காரணமாக உள்ளதாலும், தொடர்ந்து எரிந்து கொண்டிருக்கும் தீயினை அனைப்பதற்கு தொடர்புடைய உள்ளாட்சி நிறுவனங்களின் மூலம் போர்கால அடிப்படையில் அவசர அவசியம் கருதி பணியினை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், செங்கல்பட்டு மண்டலம் ஆகியோரால் தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து, தினமும் பணியாளர்களை மற்றும் தண்ணீர் டாங்கர் லாரிகள், தீயணைப்புத்துறை வாகனங்களுக்கு தேவையான எரிபொருள், தண்ணீர் போன்ற அடிப்படை தேவைகளை ஏற்படுத்தி இரவு பகல் பாராமல் தொடர்ந்து தீயணைப்பு பணிகளை மேற்கொள்வதற்கு ஆகும் தோராய செலவினத் தொகை ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. மேலும், அவசர அவசியம் கருதி உள்ளூர் வாகன உரிமையாளர் மற்றும் ஒப்பந்ததாரர்களிடமிருந்து விலைப்புள்ளிகள் கோரி வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பார்வைக்கும், குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததார் மூலம் பணி உத்திரவு வழங்கி பணிகள் செயல்படுத்தியமைக்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பொருளின் விவரம் | விலைப்புள்ளி நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | | |
|---|---|---|---|---|
| | | திரு. கே. ராமதாஸ், ஒப்பந்ததாரர், செம்பாக்கம் நகராட்சி | பவர்லைன் டிரேடர்ஸ் கோவூர், சென்னை 122 | சிம்லா கூல் மேக்கர்ஸ் மேற்கு தாம்பரம், சென்னை 45 |
| 1 | டாங்கர் லாரி மூலம் 5 எண்ணிக்கை தண்ணீர் விநியோகம் செய்தல் பணி | ரூ.2100/- | ரூ.2350/- | ரூ.2500/- |
| 2 | தீயணைப்பு | ரூ.455/- | ரூ.475/- | ரூ.490/- |

| | | | | |
|---|---|---|---|---|
| | பணிகளுக்கு பணியாளட்கள் சப்ளை செய்தல் பணி (ஒரு நாள்) | | | |
| | விலைப்புள்ளி விகிதம் | குறைவு | அதிகம் | அதிகம் |

**அலுவலக குறிப்பு:**

1. இச்செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. அவசர அவசியம் தீயணைக்கும் பணியினை மேற்கொள்வதற்கு தேவையான வாகன உபகரணங்கள் மற்றும் இதர கருவிகளை தேவைக்கேற்ப ஏற்படுத்தி கொள்ளும் பொருட்டு உள்ளூர் நிறுவனத்தின் மூலம் விலைப்புள்ளிகள் பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

**தீர்மான எண்.478 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.5**

2019-20ம் ஆண்டிற்கு இந்நகராட்சி பணியாளர்களுக்கு பண்டிகை முன்பணங்கள் மற்றும் இதர முன்பணங்கள் வழங்குவதற்கு தோராய செலவினம் ரூ.3,00,000/- மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.479 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.6**

செம்பாக்கம் நகராட்சி ஆணையர் மீது தொடரப்படும் வழக்குகள் தொடர்பாக இந்நகராட்சி சார்பில் ஆஜராகுகும மாவட்ட கோர்ட் மற்றும் சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர்களுக்கு வழங்க வேண்டிய வழக்கு கட்டணம் 2019-20ம் ஆண்டிற்கு தோராய செலவினம் ரூ.3,00,000/- மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.480 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**
**பொருள் எண்.7**

2019-20ம் ஆண்டிற்கு நகராட்சி பணியாளர்கள் அலுவலக பணிக்காக பயணம் செய்ய பயணப்படிகள் வழங்கவும், பணியாளர்கள் பணி மாறுதலில் இடமாற்ற பயணப்படி வழங்கவும் மற்றும் பயிற்சிக்காக செல்லும் போது வழங்க வேண்டிய பயணப்படி வழங்கவும் மற்றும் பிற பயணப்படிகள் வழங்க ரூ.100000/- க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.481 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.8**

2019-20ம் ஆண்டிற்கு இந்நகராட்சி ஓய்வு பெறும் பணியாளர்களுக்கு சிறப்பு சேம நல நிதி தொகை, அதற்கான வட்டி தொகை மற்றும் நகராட்சி பங்குத் தொகை வழங்குவதற்கு தோராய செலவினம் தொகை ரூ.200000/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.482 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.9**

செம்பாக்கம் நகராட்சியில் ஓட்டுநராக பணிபுரியும் திரு. ஆர். மோகன் என்பவர் தனது குடும்ப சூழ்நிலை காரணமாக இந்நகராட்சியிலிருந்து சென்னை மாநகராட்சிக்கு பணி மாற்றம் செய்ய கோரி சமர்ப்பிக்கப்பட்ட மனுவினை மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** திரு. மோகன், ஓட்டுநரின் விண்ணபத்தினை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், செங்கல்பட்டு மண்டலம் அவர்களின் வழியாக நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் தக்க நடவடிக்கைக்கு பரிந்துரை செய்ய மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.483 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.10**

செம்பாக்கம் நகராட்சியில் குடிநீர் விநியோக பிரிவின் கீழ் அமைக்கப்பட்டுள்ள சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் அமைப்புகளிலிருந்து பொது மக்களுக்கு விநியோகம் செய்யப்படும் குடிநீருக்கு வசூலிக்கப்படும் கட்டணங்களுக்காக வழங்கப்படும் இரசீது புத்தகங்களை அவசர அவசியம் கருதி உள்ளூர் அச்சு நிறுவனமான ஸ்ரீ கிருஷ்ணா பிரிண்டர்ஸ் நிறுவனத்தில் அச்சிடவும், அதற்கான செலவுத் தொகை ரூ.3500/-ஐ வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** அவசர அவசியம் கருதி உள்ளூர் அச்சு நிறுவனத்தில் அச்சிட்டு பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

**தீர்மான எண்.484 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.11**

செம்பாக்கம் நகராட்சியில் வரி மற்றும் வரியில்லா நிலுவை இனங்களை வசூல் செய்திட துரித நடவடிக்கை எடுக்கும் பொருட்டு தேவையான கேட்பு அறிவிப்புகள் அச்சடித்தல், வரி வசூல் இரசீதுகள்அச்சிட்டு சப்ளை செய்திட ஆகும் தோராய செலவின ரூ.3.00 இலட்சத்திற்கும் . மேலும், இப்பணிகளை அவசர அவசியம் கருதி அரசு அங்கீகாரம் பெற்ற கூட்டுறவு நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி கோரி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பொருளின் விவரம் | ஒப்பந்தப்புள்ளி நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | |
|---|---|---|---|
| | | எ.எ எண்டர்பிரைசஸ் 25, அகரம் மெயின் ரோடு, பதுவஞ்சேரி, சென்னை 126 | ஜார்ஜ் டவுன் பலநோக்கு தொழில் கூட்டுறவு சங்கம், 9எ, தேனாம்பேட் ராமசாமி தெரு, கொண்டிதோப்பு, சென்னை 79. |
| | | (Incl of GST) | (Excl. of GST) |
| 1 | Receipt (1+1) | 3.60 | 3.75 |
| 2 | Demand Notices 15 Days | 3.25 | 3.40 |
| 3 | Demand Notices 7 Days | 3.25 | 3.40 |
| | விலைப்புள்ளி விகிதம் | குறைவு | அதிகம் |

**அலுவலக குறிப்பு:** அவசர அவசியம் கருதி அரசு அங்கீகாரம் பெற்ற கூட்டுறவு நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

**தீர்மான எண்.485 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.12**

செம்பாக்கம் நகராட்சியின் 2018–19 ம் ஆண்டின் திருத்திய மதிப்பீடு மற்றும் 2019–20 ம் ஆண்டின் திட்ட மதிப்பீட்டினை அவசர அவசியம் கருதி தனியார் நிறுவனத்திடமிருந்து விலைப்புள்ளி பெற்று மேற்கொள்ளவும், அதற்கான தோராய செலவின மதிப்பீடு ரூ.50,000/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. மேலும் அவசர அவசியம் கருதி குறைந்த விலைப்புள்ளி அளித்த நிறுவனம் மூலம் பணி உத்திரவு வழங்கி நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றத்தின் பின்னேற்பு அங்கீகாரத்திற்கு.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.486 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.13**

செம்பாக்கம் நகராட்சியின் அலுவலகத்தின் சார்பாக GST amount on TDS to be recovered from the payments made to contractors for the services rendered by them during 2019-20

period and filling of GSTR7 Returns செய்திட Consultant APD Tax Solutions நிறுவனத்தை நியமித்திடவும் அதற்கான மாதாந்திர Consultancy Charges வழங்கிடவும் மன்றத்தின் ஒப்புதலுக்கு.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.487 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.14**

செம்பாக்கம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் 4620 எண்ணிக்கையிலான பல்வேறு தெரு விளக்குகளை தனியார் மூலம் பராமரிக்கும் பணியினை 2019–2020ம் நிதியாண்டிற்கு மேற்கொள்ளவும், ஏற்கனவே பணி செய்துள்ள சிம்லா கூல் மேக்கர்ஸ் நிறுவனத்திற்கு ஒப்பந்தப்புள்ளி ஒப்பந்தத்தின் படி மூன்றாம் ஆண்டிற்கு ஒப்பந்தத்தை கால நீட்டிப்பு செய்ய இந்நகர் மன்ற தீர்மானம் எண்.474 நாள் 7.3.2019ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளதை தொடர்ந்து, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எனவே, பொது மக்களின் நலன் கருதி ஜூன் மற்றும் ஜூலை 2019 ஆகிய இரு மாதங்களுக்கு தெரு விளக்கு பராமரிப்பு பணியினை தற்போது பணி செய்து வரும் ஒப்பந்ததாரர் மூலம் அதே ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தில் பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மூன்றாம் ஆண்டிற்கு ஒப்பந்த கால நீட்டிப்பு செய்ய பிரேரணை சமர்பிக்கப்பட்டுள்ளதால், பொது மக்களின் நலன் கருதி ஜூன் மற்றும் ஜூலை 2019 ஆகிய இரு மாதங்களுக்கு தெரு விளக்கு பராமரிப்பு பணியினை தற்போது பணி செய்து வரும் ஒப்பந்ததாரர் மூலம் அதே ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.488 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.15**

செம்பாக்கம் நகராட்சி இரண்டாம் நிலை நகராட்சியாகும். 2011ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இந்நகராட்சியின் மக்கள்தொகை 45356 ஆகும். தற்போது பரப்புரையாளர் கணக்கெடுப்பின்படி வீடுகளின் எண்ணிக்கை 16585 ஆகும். அதன் படி இந்நகரின் தற்போதைய மக்கள் தொகை 66340 ஆகும். இந்நகராட்சி சென்னை மாநகராட்சி பகுதியினை ஒட்டி 15 வார்டுகளுடன், 6.25 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் வேகமாக வளர்ச்சி அடைந்து வரும் புறநகர் பகுதியாகும். மேலும், மொத்த 102.417 கி.மீ நீளமுள்ள சாலைகள் மற்றும் 38.52 கி.மீ நீளமுள்ள மழைநீர் வடிகால்கள் இந்நகராட்சியால் அமைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது.

இந்நகரின் எல்லையில் செம்பாக்கம் ஏரி உள்ளது. இந்த ஏரியினை ஒட்டி சிட்லபாக்கம் பேரூராட்சி மற்றும் பல்லவபுரம் நகராட்சியின் எல்லைகள் அமைந்துள்ளது. செம்பாக்கம் ஏரி பொதுப்பணித்துறையின் பராமரிப்பு மற்றும் கட்டுபாட்டில் உள்ளது. இதன் சர்வே எண்.1/1, செம்பாக்கம் கிராமம் மற்றும் மொத்த விஸ்தீரனம் 44.34.50 ஹெக்டர் (110 ஏக்கர்) ஆகும். மேலும் இந்த ஏரி விவசாய பாசனத்திற்கு பயன்படுத்தப்பட்டு வந்த ஏரியாகும். தற்போது ஆகாய தாமரைகளும், மண் நிரம்பி

உள்ளதால் ஏரியினை சுத்தப்படுத்தி, ஆழப்படுத்தவும் மற்றும் கரைகளை அகலப்படுத்தி பலப்படுத்தவும், மழைநீர் சேகரிப்பு வசதியினை ஏற்படுத்தவும், ஏரிக்கரையினை ஒட்டி பூங்கா அமைத்து அவற்றில் குழந்தைகள் விளையாட்டு சாதனங்கள் பொருத்திடும் பணியினை மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட தோராய மதிப்பீடு தொகை ரூ.1800.00 இலட்சம் ஆகும். மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

செம்பாக்கம் ஏரியினை புனரமைத்து பாதுகாத்திடவும், இந்நகரில் கோடைக்காலங்களில் ஏற்படும் குடிநீர் பற்றாக்குறையினை தவிர்க்க பொதுப்பணித்துறையின் (நீர் ஆதாரம்) மூலம் பணியினை மேற்கொள் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் வழியாக பிரேரணை அனுப்ப மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.489** **அலுவவக குறிப்பு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள் எண். 16**

செம்பாக்கம் நகராட்சியின் 3வது வார்டு ஹெரிட்டேஜ் ஜெயேந்திரர் நகர் மற்றும் நன்மங்கலம் காப்பு காட்டினை இடைப்பட்ட பகுதியில் அமைந்துள்ள செம்பாக்கம் கிராமம் சர்வே எண்.148ல் முழு விஸ்திரணம் 2.10.50 ஹெக்டேர் மேய்கால் புறம்போக்கு இடத்தில், ஆக்கிரமிப்பு ஏதுமின்றி செம்பாக்கம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ளது. மேலும் 3வது வார்டு பகுதியிலுள்ள சாம்ராஜ் நகர், தாரகேஸ்வரி நகர் ஆகிய பகுதிகளில் குடிநீர் விநியோகத்திற்கான நீரழுத்தம் குறைவாக உள்ளது. இதனால் அந்த பகுதிகளில் குடிநீர் விநியோகம் சரிவர வழங்க இயலவில்லை. எனவே, அப்பகுதியில் குடிநீர் விநியோகம் சீராக வழங்க அப்பகுதியில் ஒரு மேல் நிலை நீர் தேக்கத் தொட்டி மற்றும் ஒரு திறந்த வெளி கிணறு அமைத்து குடிநீர் விநியோகம் வழங்கவும், மேலும், இந்நகராட்சிக்கு எல்லைக்குட்பட்ட பகுதியில் 8200 எண்ணிக்கையிலான வீட்டு குடிநீர் இணைப்புகள் வழங்க நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களால் அனுமதி வழங்கபட்டு வீட்டு குடிநீர் இணைப்பு வழங்க மனுக்கள் பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

எனவே, இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் நகராட்சிக்கு சொந்தமான இடம் ஏதுமில்லாத காரணத்தினால் செம்பாக்கம் கிராமம் சர்வே எண்.148ல் காலியாக உள்ள 2.10.50 ஹெக்டேர் மேய்கால் புறம்போக்கு இடத்தில் மேல் நிலை நீர் தேக்கத் தொட்டி மற்றும் திறந்த வெளி கிணறு அமைத்து குடிநீர் விநியோகம் செய்ய நகராட்சிக்கு முன் நுழைவு அனுமதி பெற மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மாவட்ட ஆட்சியர், காஞ்சிபுரம் மாவட்டம் அவர்களின் முன் நுழைவு அனுமதி பெற பிரேரணை அனுப்ப மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.490** **அலுவலக குறிப்பிற்கு அனுமதி வழங்கப்பட்டது.**

**பொருள் எண்.17**

செம்பாக்கம் நகராட்சி ஆணையர் அவர்களின் மே 2019 மாதத்திய நாட்குறிப்பேட்டினை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** பதிவு செய்யலாம்.

**தீர்மானம் எண்.491** **பதிவு செய்யப்பட்டது.**

## பொருள் எண்.18

செம்பாக்கம் நகராட்சியில் 2019–20 ம் ஆண்டின் பொது நிதியின் கீழ் 27.5.2019 ம் நாள் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ. லட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி விவரம் | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | செம்பாக்கம் ஏரிக்கரை தெருவில் ஆழ்துளை கிணறு அமைத்து நீர்மூழ்கி மின் மோட்டார் பொருத்தி குடிநீர் குழாய் பதித்தல் பணி | 4.00 | ஆர். சுஜாதா | மதிப்பீட்டை விட 0.22% குறைவு |
| | | | வி. கோதண்டராமன் | மதிப்பீட்டை விட 1.30% அதிகம் |
| 2 | ஆர்.பி. அவென்யு பகுதியில் ஆழ்துளை கிணறு அமைத்து நீர்மூழ்கி மின் மோட்டார் பொருத்தி குடிநீர் குழாய் பதித்தல் பணி | 4.00 | எல். கிஷோர்குமார் | மதிப்பீட்டை விட 0.15% குறைவு |
| | | | எல். சதீஷ்குமார் | மதிப்பீட்டை விட 1.60% அதிகம் |
| 3 | செம்பாக்கம் நன்மங்கலம் மெயின் ரோடு பகுதியில் ஆழ்துளை கிணறு அமைத்து நீர்மூழ்கி மின் மோட்டார் பொருத்தி குடிநீர் குழாய் பதித்தல் பணி | 4.00 | எல். கிஷோர்குமார் | மதிப்பீட்டை விட 0.15% குறைவு |
| | | | எல். சதீஷ்குமார் | மதிப்பீட்டை விட 1.60% அதிகம் |
| 4 | குளக்கரை தெருவில் ஆழ்துளை கிணறு அமைத்து நீர்மூழ்கி மின் மோட்டார் பொருத்தி குடிநீர் குழாய் பதித்தல் பணி | 4.00 | ஆர். சுஜாதா | மதிப்பீட்டை விட 0.22% குறைவு |
| | | | வி. கோதண்டராமன் | மதிப்பீட்டை விட 1.30% அதிகம் |
| 5 | 2வது பஜனை கோயில் தெருவில் ஆழ்துளை கிணறு அமைத்து நீர்மூழ்கி மின் மோட்டார் பொருத்தி குடிநீர் குழாய் பதித்தல் பணி | 4.00 | எல். கிஷோர்குமார் | மதிப்பீட்டை விட 0.15% குறைவு |
| | | | எல். சதீஷ்குமார் | மதிப்பீட்டை விட 1.60% அதிகம் |
| 6 | மணியம்மை தெருவில் ஆழ்துளை கிணறு அமைத்து நீர்மூழ்கி மின் மோட்டார் பொருத்தி குடிநீர் குழாய் பதித்தல் பணி | 4.00 | எல். கிஷோர்குமார் | மதிப்பீட்டை விட 0.15% குறைவு |
| | | | எல். சதீஷ்குமார் | மதிப்பீட்டை விட 1.60% அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 7 | விஜிபி சீனிவாசா நகர் வடக்கு பகுதியில் ஆழ்துளை கிணறு அமைத்து நீர்மூழ்கி மின் மோட்டார் பொருத்தி குடிநீர் குழாய் பதித்தல் பணி | 4.00 | எல். கிஷோர்குமார் | மதிப்பீட்டை விட 0.15% குறைவு |
| | | | எல். சதீஷ்குமார் | மதிப்பீட்டை விட 1.60% அதிகம் |
| 8 | திருமகள் நகர் - கிருஷ்ணா அவென்யு பகுதியில் ஆழ்துளை கிணறு அமைத்து நீர்மூழ்கி மின் மோட்டார் பொருத்தி குடிநீர் குழாய் பதித்தல் பணி | 4.00 | ஆர். சுஜாதா | மதிப்பீட்டை விட 0.22% குறைவு |
| | | | வி. கோதண்டராமன் | மதிப்பீட்டை விட 1.30% அதிகம் |
| 9 | ராஜகீழ்பாக்கம் ஏரிக்கரை பகுதியில் ஆழ்துளை கிணறு அமைத்து நீர்மூழ்கி மின் மோட்டார் பொருத்தி குடிநீர் குழாய் பதித்தல் பணி | 4.00 | ஆர். சுஜாதா | மதிப்பீட்டை விட 0.22% குறைவு |
| | | | வி. கோதண்டராமன் | மதிப்பீட்டை விட 1.30% அதிகம் |
| 10 | வள்ளலார் தெருவில் ஆழ்துளை கிணறு அமைத்து நீர்மூழ்கி மின் மோட்டார் பொருத்தி குடிநீர் குழாய் பதித்தல் பணி | 4.00 | எல். கிஷோர்குமார் | மதிப்பீட்டை விட 0.15% குறைவு |
| | | | எல். சதீஷ்குமார் | மதிப்பீட்டை விட 1.60% அதிகம் |
| 11 | சர்ச் தெரு அன்னை அஞ்சுகம் அம்மையார் பூங்கா அருகில் ஆழ்துளை கிணறு அமைத்து நீர்மூழ்கி மின் மோட்டார் பொருத்தி குடிநீர் குழாய் பதித்தல் பணி | 4.00 | ஆர். சுஜாதா | மதிப்பீட்டை விட 0.22% குறைவு |
| | | | வி. கோதண்டராமன் | மதிப்பீட்டை விட 1.30% அதிகம் |
| 12 | வள்ளல் யூசப் நகர் மெயின் ரோடு ஆழ்துளை கிணறு அமைத்து நீர்மூழ்கி மின் மோட்டார் பொருத்தி குடிநீர் குழாய் பதித்தல் பணி | 4.00 | ஆர். சுஜாதா | மதிப்பீட்டை விட 0.22% குறைவு |
| | | | வி. கோதண்டராமன் | மதிப்பீட்டை விட 1.30% அதிகம் |
| 13 | செம்பாக்கம் நகராட்சிக்குட்பட்ட விஜிபி பொன் நகர் OHT முதல் சாம்ராஜ் நகர் 1வது தெரு வரை, கணேஷ் நகர் மெயின் ரோடு, 2வது பஜனை கோயில் தெரு, புகழேந்தி தெரு, அகத்தியர் தெரு மற்றும் வள்ளல் யூசப் நகர் 2வது தெருவில் குழாய் பதித்தல் பணி | 9.90 | ஆர். சுஜாதா | மதிப்பீட்டை விட 0.20% குறைவு |
| | | | வி. கோதண்டராமன் | மதிப்பீட்டை விட 1.20% அதிகம் |
| 14 | நகராட்சியின் பராமரிப்பில் உள்ள திறந்த வெளி கிணறுகள் தூர் வாரி ஆழப்படுத்துதல் பணி | 9.90 | கே. ராமதாஸ் | மதிப்பீட்டை விட 0.18% குறைவு |
| | | | எல். கிஷோர்குமார் | மதிப்பீட்டை விட 2.20% அதிகம் |

**அலுவலக குறிப்பு:** பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரருக்கு தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றம் பின்னேற்பு அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.492** **அலுவலக குறிப்பு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

## பொருள் எண்.19

இந்நகராட்சியில் அவசர அவசியம் கருதி கீழ் கண்ட பணிகளை தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் **1920** பிரிவு**(15)**ன் கீழ் பணி மேற்கொண்டு முடிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | செலவு சீட்டு எண். | பணி முடிக்கப்பட்டு செலவிடப்பட்ட தொகை. ரூ |
|---|---|---|---|
| 1 | பொது சுகாதர பிரிவில் இயங்கும் வாகனம் எண்.TN11 AJ8201 மற்றும் TN11 AJ8245 (TATA ACE) ஆயில் சர்வீஸ் செய்யும் பணி | RCF BPV 053/23.4.2019 | 5365/- |
| 2 | பொது சுகாதர பிரிவில் இயங்கும் வாகனம் எண்.TN11 AJ8220, TN11 AJ8264 மற்றும் TN11 AJ8283 (TATA ACE) ஆயில் சர்வீஸ் செய்யும் பணி | RCF BPV 054/24.4.2019 | 8438/- |
| 3 | நகராட்சிக்கு சொந்தமான பொலிரோ வாகனம் பதிவு எண். TN11 AK6142 ஆயில் சர்வீஸ் செய்யும் பணி | RCF BPV 029/11.4.2019 | 3621/- |
| 4 | நகராட்சிக்கு சொந்தமான இன்னோவா வாகனம் பதிவு எண். TN11 D2013 ஆயில் சர்வீஸ் செய்யும் பணி | RCF BPV 981/19.3.2019 | 48202/- |

**அலுவலக குறிப்பு** மன்றம் பதிவு செய்யலாம்
**தீர்மானம் எண்.493** **பதிவு செய்யப்பட்டது.**

**தனி அலுவலர் மற்றும் ஆ ணையாளர்**
**செம்பாக்கம் நகராட்சி**